DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | -- |
| Miscellaneous | -- |
| Preliminary Register | : **CC 706/2025** |
| Deposition of Witness for | : PW3 |
| Name | : கவிஞர் பாரதி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 31.07.2026. |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 21 July 2026.

**எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>முதல்விசாரணை:</u>**

நான் தற்போது கருத்தானூர் வசித்து வருகிறேன். நான் கோமதியம்மாள் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 11 வகுப்பு படித்து வருகிறேன்.எனது பிறந்த தேதி 28.11.2008 ஆகும். மேற்படி சாட்சியின்

வயது 18 வயது கீழ் உள்ளதால் நீதிமன்றம் நீதியின் நலன் கருதி சாட்சியிடம் அவரது மனநிலை மற்றும் புரிந்துகொள்ளக்கூடிய திறனை அறிவதற்காக கீழ்க்கண்ட கேள்விகள் அவரிடம் கேட்கப்பட்டது.

**கேள்வி: உங்கள் பெயர் என்ன ?**

**பதில் : கவிஞர் பாரதி**

**கேள்வி : உங்கள் வயது என்ன?**

**பதில் : 17 (28.11.2008)**

**கேள்வி : நீங்கள் எங்கே குடியிருந்து வருகிறீர்கள்?**

**பதில் : கருத்தானூரில் வசித்து வருகிறேன்**

**கேள்வி: உங்களுக்கு எழுதப்படிக்கத்தெரியுமா?**

**பதில் : எழுதப்படிக்கத்தெரியும்**

**கேள்வி : இது என்ன இடம் தெரியுமா?**

**பதில்: நீதிமன்றம்**

**கேள்வி : நீங்கள் எதற்காக வந்துள்ளீர்கள்?**

**பதில் : நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன்.**

**கேள்வி: உங்ளை சாட்சியம் சொல்ல கட்டாயப்படுத்தியோ, வற்புறுத்தியோ ஆசை வார்த்தை கூறியோ அழைத்து வந்தார்களா?**

**பதில் : இல்லை.**

மேற்படி சாட்சியிடம் கேள்விகளை நீதிமன்றம் வினவியப்பின் சாட்சி குழந்தை சாட்சியாக இருந்தாலும் கூட கேள்வியை புரிந்துகொண்டு தெளிவாக பதில் சொல்லும் மனநிலையில் உள்ளதால் சாட்சியின்

சாட்சியத்தை பதிவு செய்யப்படுகிறது. எதிரி எனக்கு தெரியும். என்னிடம் போலிசார் இரண்டு கையெழுத்து வாங்கினார்கள். அந்த கையெழுத்து தான் எங்கு வைத்து எப்போது போட்டேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில், அத்தாட்சியில் உள்ள 2–வது கையொப்பம் என்னுடையது தான். **ஒப்புதல் வாக்குமூலத்தில் அந்த கையெழுத்து அ.சா.ஆ. 4 ஆகும். அத்தாட்சியில் உள்ள அந்த கையெழுத்து அ.சா.ஆ. 5 ஆகும்.** போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் போலீசார் விசாரணையில் கடந்த 27.06.2025 15.00 மணிக்கு நானும் மகாராஜன் என்பவரும் கருத்தானூர் சென்றுகொண்டிருக்கும்போது அங்கு வந்த ஆஜர் எதிரி வரதாராஜ் என்பரை உதவி ஆய்வாளர் விசாரித்தபோது அவராக வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் வழக்கிற்கு பயன்படுத்திய அரிவாள் மட்டும் 10 கிராம் கஞ்சா ஆகியவற்றை அத்தாட்சி மூலம் பெற்று கைப்பற்றினார் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை**

M MARI Digitally signed by M MARI
Date: 2026.07.31
20:05:10 +0530